ஆ. இளம் வயதினரிடையே பரவும் நீரிழிவு நோயைத் தடுத்தல்.

திரு. எஸ். இராசாராமன்: மாற்றுத் தலைவரவர்களே, "தமிழ்நாட்டில் அதிக அளவில் இளம் வயதினருக்கு நீரிழிவு நோய் பரவியுள்ளதால் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாட்டில் இளைஞர்களிடம் நீரிழிவு நோய் ஓரளவு உள்ளதாகத் தெரியவருகிறது. அரசு மருத்துவமனைகளில் நீரிழிவு நோயை கண்டறிவதற்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி வசதிகள் உள்ளதாலும் மக்களிடையே இந் நோய் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருவதாலும், இந் நோய் சிறுவர்களிடையே பரவியுள்ள விவரம் தெரிய வருகிறது.

1. எல்லா மருத்துவக் கல்வி பயிற்சி நிலையங்களிலும் நீரிழிவு நோயை அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன.

2. மக்கள் இந் நோயின் தன்மைபற்றி அறிந்துகொண்டு பெருமளவில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

3. மருத்துவக் கல்விப் பயிற்சி நிலையங்களில் முறையான புள்ளி விவர ஆய்வுகள் (Periodical survey) நடத்தப்படுகின்றன.

2. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1968, 1979 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் கணக்கிடப்பட்டுள்ள நீரிழிவு புள்ளி விபர ஆய்வின் மூலம் மொத்தம் பதிவு செய்யப்பட்ட நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 905, 849, 920 ஆகும். இவர்களில் சிறார்களின் எண்ணிக்கை முறையே 55, 64, 63 ஆகும். எனவே இந் நோயால் பாதிக்கப்

1981 ஏப்ரல் 25] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பட்டுள்ள மொத்த நபர்களில் சிறார்கள் சுமார் 5 சதவிகிதத்தினராவார்கள். சென்னை நகரின் ஏனைய மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளின் நீரிழிவு புள்ளிவிபர ஆய்வுகளும் மேற்கண்ட புள்ளி விவரத்தை உறுதிப்படுத்துகின்றன.

3. சிறுவர்களிடையே காணப்படும் நீரிழிவு நோயை கீழ்க்கண்ட முறைகளினால் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(அ) மக்களுக்கு ஊட்டச்சத்தை அதிகமாக வழங்குதல்.

(ஆ) வம்சாவழி முறையில் ஆலோசனை கூறுதல் (Genetic Counselling).

(இ) இந் நோயை பரப்பும் கிருமிகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) இந்நோய் பரவி உள்ளதற்கும் அதற்குரிய காரணத்தையும் தொற்று நோய் புள்ளிவிபர ஆய்வின் (Epedimiological Survey) மூலம் கண்டறிதல்.

4. தற்பொழுது எல்லா மாவட்ட மற்றும் முக்கிய வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் நீரிழிவு நோயை கண்டுபிடிப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் வசதிகள் உள்ளன.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாகத் தான் இந்த நீரிழிவு வியாதி, அதுவும் சிறுவர்களிடையே தமிழ்நாட்டிலே பரவி வருகிறது. இந்த வியாதி பரம்பரையாக வரக்கூடிய வியாதி. இளம் சமுதாயமே இந்த நோயினால் பாதிக்கப்படக் கூடிய அளவிற்கு இந்த நோய் பரவி வருகின்றது. வருங்காலத்தில் சந்ததிகள் பூராவும் இந்த நோய் பரவும் என்பதை இந்த அரசு கவனித்திற்கு கொண்டு வருகின்றேன். இந்த வியாதிக்கு மூல காரணம், அத்யாவசிய உணவுப் பொருள்களில் கலப்படம் நடைபெறுவதால் தான் அதிக அளவில் பரவி வருகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்த வியாதி பரவுவதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்தை மாண்புமிகு உறுப்பினர் கூர்ந்து கவனித்திருப்பார் என்று கருதுகிறேன். இந்த மூன்று

ஆண்டுகளிலே, 1978, 1979, 1980 ஆகிய ஆண்டுகளிலே எந்த அளவுக்கு ஜுவினியல் டயபெட்டிஸ் சிறுவர்களுக்கு டயபெட்டிஸ் உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால் 5 சதவீதம்தான் உயர்ந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் இயற்கையிலே Pancreatic glands என்பதிலே இருக்கின்ற கோளாறினாலே வருகின்றது என்று பல்வேறு நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கலப்படத்தைக் கட்டுப்படுத்துவது அவசியம்தான், அதிலே கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் ஜுவனியல் டயபெட்டிஸுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 21. மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,41,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மீன் பிடிப்பதற்கான நவீன யந்திரங்கள் உபரியாக்குவதற்கான நிலைமை ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 3,41,14,000-இல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்."

THIRU S. RAJARAMAN: To discuss the need to train members from all the communities in fishing and to offer incentives to such persons, I move—

"That the allotment of Rs. 3,41,14,000 under Demand No. 21 be reduced by Rs. 100."

திரு. டி. மணி: மாற்றுத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நீரோடியிலிருந்து எரேமியன் துறை வரை கடந்த 3 ஆண்டு காலமாக கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 3,41,14,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."